சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS.112/2023**

2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19ம் நாள் வியாழக்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.வெ.லட்சுமி, எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லட்சுமனகாந்தன் (எ) சோமசுந்தரம் | தொழில் | பைனான்ஸ் |
| தந்தை பெயர் | ஆறுமுகம் | ஜாதி | |
| கிராமம் | மொரப்பந்தாங்கல் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

19.09.2024 முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என்தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்புசான்றாவணங்களாக, 10.02.2020 தேதியிட்ட பட்டா நெம்பர் 339-க்கான கணினி சிட்டா பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.1**, 12.10.1994 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் அசல் **வா.சா.ஆ.2**, 14.12.2002 தேதியிட்ட சின்னகுழந்தை என்கிற நடப்பா இறப்புசான்று அசல் **வா.சா.ஆ.3,** 04.05.2012 தேதியிட்ட தான செட்டில்மென்ட் பத்திரம் பதிவிறக்கம் செய்யப்பட்டநகல் **வா.சா.ஆ.4,** 18.04.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.5,** 15.05.2023 தேதியிட்ட பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.6,** பதிவு துறை வழிகாட்டு மதிப்பீட்டு ஆவணம் **வா.சா.ஆ.7,** தாக்கல் செய்கிறேன். வழக்கில் கோரியுள்ளவாறு தீர்ப்பு பிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.